[திரு. செல்லூரர் கா. ராஜு] [2019 ஜூலை 18

வியாபாரம் குறைவாக இருக்கும்பட்சத்தில், அருகிலேயே மாற்று இடத்தில் மருந்தகம் அமைப்பதற்கு துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், மருந்தாளுநர்கள் யாருக்கும் மன உளைச்சல் இல்லை, மகிழ்ச்சியாகவே இருக்கிறார்கள், யாருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை. அதுவும் கூட்டுறவுத் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சியில் 21 சதவிகிதம் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது எந்த வரலாற்றிலும் கிடையாது. அவர்களது ஆட்சிக் காலத்திலும் கிடையாது. அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் சம்பளத்தை இரண்டு முறை உயர்த்தி, 21 சதவிகிதம் வரை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இதில் எந்தவிதமான தவறுகளோ, யாருக்கும் எந்தவிதமான மன உளைச்சலுமோ இல்லை, நன்றாகவே இருக்கிறார்கள். அம்மா மருந்தகங்களைக் கூடுதலாகத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

(இ) காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி கூடுதல் மருத்துவர்களை நியமித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி, கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 18]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அரசு மருத்துவமனை 50 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டுவரும் வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாள் ஒன்றுக்கு 754 வெளி நோயாளிகளும், 29 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனைக்கு 5 உதவி மருத்துவர்கள், 1 உதவி பல் மருத்துவர், 1 செவிலியர் கண்காணிப்பாளர், 6 நிரந்தர செவிலியர்கள், 2 ஒப்பந்த செவிலியர்கள், 3 மருந்தாளுநர்கள், 2 ஆய்வக நுட்புனர்கள், 1 நுண்கதிர் வீச்சாளர், 1 இயன்முறை சிகிச்சை நுட்புனர், 2 அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் 19 மருத்துவம் மற்றும் மருத்துவம்சாரா இதர பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, பணியாளர்கள் பணியில் உள்ளனர். அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் மற்றும் கலந்தாய்வுமூலம் நிரப்பப்படுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு மற்றும் முதலமைச்சரின் காப்பீட்டுப் பிரிவு, காய்ச்சல் பிரிவு போன்ற பிரிவுகள் உள்ளன. நுண்கதிர் பிரிவு, ஸ்கேன் அறை, பிரசவ வார்டு, அறுவை அரங்கம், தொற்றா நோய் சிகிச்சை (NCD) *பிரிவு ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மல்டி பேரா மீட்டர், பல்ஸ் ஆக்சி மீட்டர், டிஃபிபிரிலேட்டர்* (Defibrillator), *எச்பிஏ1சி அனலைசர்* (Hba1c Analyser), *எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற தேவையான கருவிகள் உள்ளன. மாதம் ஒன்றுக்கு சராசரியாக 16,390 ஆய்வக பரிசோதனைகள், 134 எக்ஸ்ரே, 180 இ.சி.ஜி. மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மாதம் ஒன்றுக்கு 345 சிறிய வகை அறுவை சிகிச்சைகளுடன் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்* (RO plant) *மற்றும் சமையலறை வசதி உள்ளது. மேலும், புதியதாக வெளி நோயாளிகள் பிரிவு, கட்டணக் கழிப்பிடம், உயிரி மருத்துவ கழிவு சேமிப்பு அறை ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மாவட்ட ஆட்சியர் நிதிமூலம் ரூ.10 இலட்சம் செலவில் அவசர சிகிச்சை கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் மருத்துவர் குடியிருப்பு வசதி, சுற்றுச்*

சுவர், 108 ஆம்புலன்ஸ் வசதி உள்ளது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையில் உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போது உள்ள பணியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ள மருத்துவம் மற்றும் மருத்துவம்சாரா பணியாளர்களைக் கொண்டு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, செய்யூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் அரசு மருத்துவர்களை நியமித்து, மருத்துவமனையினைத் தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, அறிக்கையிலிருந்து ஒரு கேள்வி கேளுங்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே 19 மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், பணியில் இருப்பதாக தரப்பட்டுள்ளது. ஆனால், மொத்தமாக 43 மருத்துவப் பணியாளர்களில் 25 பணியாளர்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, மீதமுள்ள 18 பணியாளர்கள் நிரப்பப்படாத ஒரு நிலையுள்ளது. பொது மருத்துவர்கள், 5 மருத்துவர்களுக்குப் பதிலாக, 2 மருத்துவர்களும் ஒரு* O.G.cian–*ம்* (Obstetrician and Gynaecologist) *இருக்கிறார்கள். அந்த* O.G.cian–*ம் இப்போது* deputation–*ல் வேறு ஒரு மருத்துவமனைக்குச் செல்வதால்,* Antenatal *மற்றும்* Postnatal *மற்றும்* Gynaecologic problem–*க்கு வருகின்ற பெண்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலை இருக்கின்றது. அதேபோல* Nursing Superintendent *பணியிடம் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கிறது.* Maternity Assistant, Pharmacist, Lab Assistant, Radiographer, Dental Hygienist *மற்றும்* Hospital workers, Sanitary workers *இதுபோன்று பல்வேறு நிலைகளில் உள்ள பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே பெரும்பான்மையாக வசிக்கின்ற ஏழையெளிய மக்கள் மற்றும் விவசாயிகளுக்கு உதவிடும் வகையிலும், மேலும், உப்பளத் தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதனால், அவர்களுக்கும் உதவிடும் வகையிலும் அவர்களைப் பணி நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 ஜூலை 18]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் அரசு மருத்துவமனையில் 6 மருத்துவர்களுக்கு 5 மருத்துவர்கள் இருக்கிறார்கள், செவிலியர்கள் இருக்கிறார்கள். அதேபோல பல் மருத்துவர் இருக்கிறார், சித்த மருத்துவர் இருக்கிறார். இன்னும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கைகளை அரசு உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு, சொல்லுங்கள்.

டாக்டர் ஆர்.டி. அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையில் உள்ள Pharmacy building மிகவும் பழுதடைந்து, அங்கு மருந்துகளை வைக்க முடியாத ஒரு நிலையில் உள்ளது. சற்றேறக்குறைய 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடமாக இருப்பதோடு, சமையலறையும் மிகவும் பழுதடைந்து இடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இந்த மருத்துவமனையிலே Ortho, ENT, Paediatrician, Orthopaedic surgeon, General surgeon உட்பட மருத்துவர்களும், 24 hours X-Ray, Scan, Digital X-Ray, Dialysis machine ஆகியவை எதுவும் இல்லாத ஒரு நிலை உள்ளது. அவசர காலத்தில் ஒரு விபத்து ஏற்பட்டாலோ அல்லது சிகிச்சை பெற வேண்டுமென்றாலோ சற்றேறக்குறைய 55 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள செங்கல்பட்டுக்குச் செல்லவேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தவுடனேயே, DMS தலைமையில் ஓர் ஆய்வு செய்யப்பட்டு, புதிய கட்டடத்திற்கான கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, தாங்கள் விரும்புகிறபடி அந்த மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் படிப்படியாக நிதிநிலைக்கேற்ப மேம்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.